

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (29.07.2024) சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் தொழில் முனைவோர் மையத்திலுள்ள செயற்கை நுண்ணறிவு மையத்தினைப் பார்வையிட்டு அதன் பயன்பாடு குறித்துக் கேட்டறிந்தார். தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகத் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி மற்றும் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் தொழில் முனைவோர் மையத்தின் விஞ்ஞானிகள் டாக்டர் டேரியல் மற்றும் டாக்டர்.வில்லியம்ஸ் ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பேரறிஞர் அண்ணா கருத்தரங்க கூட்டரங்கில் நேற்று (30.07.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் “தமிழால் முடியும்” என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சியை தொடங்கி வைத்து, விழா பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொ) கோபிநாத் ஸ்டாலின் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி

# ஆன்மிக ஆட்சிக்கு உதாரணமாகத் திகழும் பொற்கால ஆட்சி!

## அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான இலட்சினை வெளியிட்டு - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, ஜுலை 31 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (29.07.2024) ஆணையர் அலுவலகத்தில் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான இலட்சினையை (Logo) வெளியிட்டார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு கூட்ட முடிவுகளின்படி பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இதற்காக என் தலைமையில் 20 உறுப்பினர்களை கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவும், ஆணையர் தலைமையில் 11 செயற்பாட்டுக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநாடு தொடர்பாக ஆதீன பெருமக்கள், ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் 10 ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும், நானும் பழனிக்கு சென்று 2 ஆய்வு கூட்டங்கள் நடத்தியதோடு, கடந்த வாரம் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புக் கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

இம்மாநாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து 36 ஆய்வுக் கட்டுரைகள் உள்பட 1,003 ஆய்வுக் கட்டுரைகள் வரப்பெற்றுள்ளன. தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய 15 நபர்களுக்கு முருகனடியார்களின் பெயரில் விருதுகள் வழங்கி சிறப்பு செய்யப்பட உள்ளது. இம்மாநாட்டிற்காக திண்டுக்கல், பழனி ஆகிய இடங்களில் தங்கும் அறைகள், 3 இடங்களில் உணவருந்தும் கூடங்கள், 10 இடங்களில் உணவு வழங்கிட ஏற்பாடுகள் என சுமார் ஒரு லட்சம் நபர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 6 நுழைவுவாயில்களுடன் 1,000 வாகனங்கள் நிறுத்தும் வசதியும், 100 இடங்களில் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதியும் ஏற்படுத்தப்படுகிறது.

இம்மாநாட்டில் மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதிகள், முக்கிய பிரமுகர்கள், வெளிநாடுகளிலிருந்து துணை அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். அறுபடை வீடுகளின் அரங்குகள், புகைப்பட கண்காட்சி, வேல்கோட்டம், 3D நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சியரங்கம், ஆன்மிக இசை நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்கம் போன்ற அம்சங்களுடன் ஆன்மிக வரலாற்றில் தமிழ்க் கடவுளாம் முருகனுக்கு சிறப்பு சேர்க்கின்ற மாநாடாக, இந்த ஆட்சிக்கு ஒரு மைல்கல்லாக அமையும்.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரீசியஸ், அமெரிக்கா, லண்டன், ஜப்பான், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கனடா போன்ற 12 நாடுகளிலிருந்து மாநாட்டில் கலந்துக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து வசதி கட்டணமில்லாமல் செய்து தருவதுடன், அவர்கள் விரும்பும் திருக்கோயில்களுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்திட ஏதுவாக செயல் அலுவலர்கள் தொடர்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

#### தமிழை முன்னெடுக்கும் ஆட்சி!

இந்த அரசு பொறுப்பேற்றபின் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆன்மிக பெருமக்கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், சான்றோர்கள் மற்றும் அலுவலர்களை கொண்ட இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, இரண்டு முறை கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

அக்கூட்டத்தில்தான் இம்மாநாடு நடத்துவது குறித்து முடிவெடுக்கப்பட்டது. தமிழுக்கும், தமிழ்க் கடவுளான முருகனுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் ஆன்மிகத்தில் இந்த அரசிற்கு எந்த தடையும் இல்லை, தமிழை முன்னெடுக்கும் ஆட்சி என்ற இரண்டு பொருட்களை இம்மாநாடு நிறைவு செய்கிறது. முதலமைச்சர் அவர்களின் மேற்பார்வையில், அவரது உத்தரவின்படி அனைத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இம்மாநாட்டிற்கு அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்படுவதோடு, உபயதாரர்கள் பங்களிப்பு மற்றும் பழனி திருக்கோயில் நிதி ஆகியவற்றை வெளிப்படைத் தன்மையோடு அறிவிப்போம்.

இம்மாநாட்டை யொட்டி பழனிக்கு உள்ளூர் விடுமுறை அளிப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார். பழனியையொட்டியுள்ள பிற மாவட்டங்களிலிருந்து கோரிக்கை வரப்பெற்றால் தேவையின் அடிப்படையில் அது குறித்து பரிசீலிக்கப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்றபின், 1,921 திருக்கோயில்களில் இதுவரை குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, இந்தாண்டு இறுதிக்குள் 2,000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும். மாநில வல்லுநர் குழுவால் 9,327 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி, ரூ.5,320.55 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள், 17,000 திருக்கோயில் களில் ஒருகால பூசைத் திட்டம், ரூ.15 கோடி மதிப்பீட்டில் ஆணையர் அலுவலக கூடுதல் கட்டடம், அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் என பல்வேறு முனைப்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் இதுவரை இந்து சமய அறநிலையத்துறையின் 74 நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டுள்ளார். துறையின் அமைச்சர் என்ற முறையில் நான் 352 நிகழ்ச்சிகளில் பங்கேற்றதோடு பல்வேறு களஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளேன். ஆகவே, இந்த ஆட்சியை எப்படி ஆன்மிகத்திற்கு எதிரான ஆட்சி என்று கூற முடியும். ஆன்மிக ஆட்சிக்கு உதாரணமாக திகழும் பொற்கால ஆட்சியாக முதலமைச்சர் அவர்களின் ஆட்சி திகழ்கிறது என்று அனைவரும் கூறுகின்ற நிலை நிச்சயம் ஏற்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

### தமிழ் மொழியில் வேளாண்மைக்கென - தனித்துவம் வாய்ந்த ‘சாட்’ ஜி.பி.டி. போன்று

# ‘அக்ரி - பாட்’ செயற்கை நுண்ணறிவு இணையதளம் உருவாக்கிடல்!

## சிங்கப்பூர் நாட்டு வேளாண் விஞ்ஞானிகளுடன் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்துரையாடல்!

சிங்கப்பூர், ஜுலை 31 - வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சரின் சிங்கப்பூர் அரசுமுறைப்பயணம் மற்றும் கலந்துரையாடல் குறித்த செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப் பணிகள் தொடர்பான ஆய்வுகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாகச் சென்றுள்ளது.

இந்தக்குழுவில் வேளாண்மை உழவர்நலத்துறை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் உடன் சென்றனர். இந்த அரசுமுறைப்பயணத்தின் ஒரு அங்கமாக சிங்கப்பூர் வந்தடைந்த வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் 29.07.2024 அன்று சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் தொழில்முனைவோர் மையத்திலுள்ள செயற்கை நுண்ணறிவு மையத்தினைப் பார்வையிட்டு அதன் விஞ்ஞானிகளான டாக்டர். டேரியல் மற்றும் டாக்டர்.வில்லியம்ஸ் ஆகியோருடன் கலந்துரையாடி வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு (Artifical Intelligence) குறித்து கேட்டறிந்தார்.

இந்தக் கலந்தாய்வின் போது தமிழ் மொழியில் வேளாண்மைக்கென தனித்துவம் வாய்ந்த “சாட் ஜி.பி.டி” போன்று “அக்ரி - பாட்” என்ற ஒரு செயற்கை நுண்ணறிவு இணையதளம் உருவாக்குவது குறித்து விவாதித்தார். இந்த செயலி மூலம் வேளாண் தொழில்நுட்பங்களையும் வேளாண்மை சார்ந்த தகவல்களையும் துரிதமாக நமது தமிழக விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்க இயலும். உழவர்கள் தங்களது கைப்பேசி வாயிலாக அனைத்துச் சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்ள இயலும்.

சிங்கப்பூர் நாட்டில் தமிழ் ஒரு ஆட்சி மொழியாக உள்ளதால் சிங்கப்பூரின் செயற்கை நுண்ணறிவு மையம் தமிழக அரசுடன் இணைந்து இந்தச் செயலியை உருவாக்க இசைவு தெரிவித்துள்ளது. மேலும், சிங்கப்பூர் நகரில் கொய்மலர்களை ஏற்றுமதி செய்யும் ஆசியாவிலேயே மிகப் பெரிய சந்தைக்கு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் சென்று பார்வை யிட்டார்கள்.

அங்கு வைக்கப்பட்டுள்ள ஆர்கிட்(Orkits), அந்தூரியம் (Anthurium), சாமந்தி (Chrysanthimam), ஹைட்ராஞ்சியா (Hydrangea) போன்ற பலவகையான கொய் மலர்களின் தரம் மற்றும் அவற்றை ஏற்றுமதி செய்யத் தேவையான நுணுக்கங்களைக் கேட்டறிந்தார். அடுத்ததாக, சிங்கப்பூர் நகரில் அமைந்துள்ள குணப்படுத்துதல் பூங்கா (Healing Garden)ஐப் பார்வையிட்டு அங்குள்ள மருத்துவ குணம் வாய்ந்த தாவரங்களைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தார்.

“சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் தொழில்முனைவோர் மையத்திலுள்ள செயற்கை நுண்ணறிவு மையத்தில் பின்பற்றப்படும் வேளாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் உயர் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்து வது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்படும்” என, வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்தார்.

### தமிழ்நாட்டிற்காக - புதிய

# சாலைப் போக்குவரத்து - நெடுஞ்சாலைத் திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் – கழக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!



சென்னை, ஜுலை 31- “தமிழ்நாட்டிற்காக புதிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?” என கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டிற்காக புதிய சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டு அல்லது முன்மொழியப்பட்டுள்ளனவா என்றும் - அவ்வாறு திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தால் அத்திட்டம் செயல்படவுள்ள வழித்தடங்களை தனித்தனியாகக் குறிப்பிட்டு விளக்கமளிக்கவும் என்பது போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகத்திடம் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு : -

தமிழ்நாட்டிற்காக புதிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு அல்லது முன்மொழியப்பட்டுள்ளதா எனவும் அவ்வாறெனில் அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்

அவ்வாறு திட்டம் வகுக்கப்பட்டிருந்தால், அத்திட்டத்திற்கான நோக்கம் குறித்தும், எந்தெந்த சாலைகள் மேம்படுத்த திட்டமிடப்பட்டு ள்ளது என்பதை குறிப்பிட்டு விளக்கவும் எனக் கேள்வி எழுப்பினார்.

அவ்வாறு முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டின் உள்ளூர் மற்றும் சமூக பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சி அடையும் என்றும், இத்திட்டங்களின் கட்டுமான பணிகளால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் எந்த வகையிலும் இடையூறு வராது என்பதை உறுதி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எனக் கேள்வி எழுப்பினார்.

சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த புதிய நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என்றும், மேலும் இந்த புதிய சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் கட்டுமானத்தின் போதும் அதற்குப் பின்னரும் பாதுகாப்புத் தரங்கள் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் கேள்வி எழுப்பினார்.

இந்த புதிய சாலை மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் குறித்து அப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் மற்றும் வணிகர்கள் போன்றோரிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்கள் பெற ஒன்றிய அரசிடம் ஏதேன் திட்டம் உள்ளதா? எனக் கேள்வி எழுப்பினார்.

### மீனவர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிய

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மீனவரணி நெஞ்சார்ந்த நன்றி!

## கழக மீனவரணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஜூலை 31 – மீனவர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை கழக மீனவர் அணி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கழக மீனவரணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின், மீனவர்களின் தேவையறிந்து ஒவ்வொரு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்.

இந்நிலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை 26.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பின் போது, தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவது குறித்தும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் பற்றியும், இதனால் ஏற்படும் இன்னல்களை எடுத்துரைத்தும், தங்களது கோரிக்கைகளை பரிசீலனை செய்து நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொண்டனர்.

அப்போது, பாம்பன் தூக்குப் பாலம் அருகே கால்வாய் தூர்வார வேண்டும் என்று முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 87 மீனவர்களையும், கைப்பற்றப்பட்டுள்ள 175 படகுகளையும் மீட்டுத்தர தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மீனவ சங்க பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

மீனவர் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அங்கு சிறையில் இருக்கும் மீனவ குடும்பங்களுக்கு தின உதவி தொகையாக தற்போது நாளொன்றுக்கு ரூ.250 வழங்கப்பட்டு வரும் நிலையில், அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திட தின உதவித் தொகையினை நாளொன்றுக்கு 350 ரூபாயாக உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

ஏற்கனவே இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி, கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு களில் இரு தவணைகளில் 151 படகுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரண உதவி வழங்க முதலமைச்சர் ஆணையிட்டிருந்தார். அதனடிப்படையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து விசைப் படகுகளுக்கு தலா ரூ.5 லட்சம் மற்றும் நாட்டுப் படகுகளுக்கு தலா ரூ.1.5 லட்சம் என மொத்தம் ரூ.6.74 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது, இலங்கைக் கடற்படையினரால் 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை கைப்பற்றப்பட்டு அங்கு நெடுங்காலமாக உள்ள 127 மீட்க இயலாத படகுகளுக்கு கடந்த ஆண்டுகளில் வழங்கிய நிவாரண தொகையினை விசைப்படகுகளுக்கு ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.6 லட்சமாக உயர்த்தியும், நாட்டுப்படகுகளுக்கு வழங்கப்பட்டு வந்த 1.5 லட்சம் ரூபாயை 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். இதனால் மீனவர்கள் ரூ.6.82 கோடி அளவிற்கு பயனடைவார்கள்.

மேலும் பாம்பன் தூக்குப்பாலம் அருகே தூர்வாரும் கோரிக்கையினை ஏற்று தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அதன் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 87 மீனவர்களையும், கைப்பற்றப்பட்டுள்ள 175 படகுகளை நேரடியான நிலையான தூதரக நடவடிக்கை மூலமாக மீட்டுத் தரவும், கைப்பற்றப்பட்டுள்ள படகுகளை ஆய்வு செய்ய குழுவினரை அனுமதிக்கவும், இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை, மீனவச் சங்கப் பிரதிநிதிகள் சந்திக்கவும், கூட்டுப் பணிக்குழு கூட்டத்தினை நடத்திடவும் இந்தியப் பிரதமரையும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சரையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

எனவே, இந்த சூழ்நிலையின் தீவிரத் தன்மையை கருத்தில் கொண்டு, நாடாளுமன்றத்தில் இப்பொருள் குறித்து பேசிடவும், தமிழ் நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கியகுழு, விரைவில் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரை நேரில் சந்தித்தும் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்துமாறு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

மீனவர்களுக்கான நிவாரணத் தொகையை அதிகரிப்பதிலும், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவசர்கள் மிகுந்த கவனம் செலுத்துகிறார் என்பது இதன் மூலம் மீண்டும் தெரிந்துகொள்ள முடிகிறது. மிக முக்கியமாக, மீனவர் குடும்பங்கள் கோரிக்கை வைத்து 3 நாட்களில் நிறைவேற்றியிருப்பதன் மூலம் முதலமைச்சரின் தாயுள்ளத்தை புரிந்து கொள்ள முடிகிறது.

மீனவர்களின் நலனில் எப்போதும் மிகுந்த அக்கறையுடன் செயல்படும் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மீனவர்கள் சார்பாகவும், மீனவரணி சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அ.ஜோசப் ஸ்டாலின் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



சிவகங்கையில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் நலத்துறை நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு நிதிஉதவியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரை, ஆனந்த், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன், மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் கே.டி.புஷ்பராஜ் ஆகியோர் உள்ளனர்.